Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.309/2024

Dated 04-03-2026
Deposition of witness for : PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகதீஸ்வரன் | வயது | : | 50 |
| தந்தை பெயர் | : | பரமசிவம் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present.**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் குடிமை பொருள் வழங்கல் குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 21.5.2024 அன்று திருக்காட்டு பள்ளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய கு.எண்.232/2024 பிரிவு 294(பி) 324 307 இ.த.ச வழக்கின்

முதல் தகவல் அறிக்கையை பெற்று பூதலூர் காவல் ஆய்வாளர் திருசிவசுப்பிரமணியன் என்பவர் முதல் விசாரணை மேற்கொண்டு சம்பவ இடமான விஷ்ணம்பேட்டை ஆதிதிராவிடர் தெரு, தாமஸ் என்பவர் வீட்டிற்கு அருகில் சென்று சாட்சிகள் அருளானந்தம். ஜோசப் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்தயார் செய்துள்ளார்.

3) பின்னர் சாட்சிகள் ஆரோக்கியமேரி, விக்டர் பெர்ணாடஸ், தாமஸ், ஏசுராஜ், புளோமின்ராஜ் வினோத்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4) பிறகு இவ்வழக்கின் எதிரியை தேடி பல்வேறு இடங்களுக்கு சென்று வந்தநிலையில் அவரது முதல் விசாரணையை முடித்து வைத்திருந்தார்.

5) நான் இந்த வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டும் பின்பு சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் அனைவரும் ஏற்கனவே விசாரித்த காவல் ஆய்வாளரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் நான்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

6) சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் விசாரணையிலும் சம்பவம் உண்மை என்று தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில் 23.5.2024ம் தேதி14.30 மணிக்கு தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல் கேட் அருகே நின்றுகொண்டிருந்த எதிரியான ரஞ்சித்குமார் என்பவரை காரணம் கூறி கைது செய்தேன். பின்பு அவ்விடத்தில் இருந்த சாட்சிகள் சேவியர், வள்ளுவன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரித்தபோது

அவர் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

7) ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி குற்றசம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை செங்கரையூர் பாலம் அருகே உள்ள புதரில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னதன் பேரில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் 14.30 மணிக்கு செங்கரையூர் பாலம் அருகே சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த 28.5 செ.மீ. நீளமுள்ள கத்தியை மகஜரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.7** ஆகும். அந்த கத்தி இதுதான். அது **சா.பொ.1.** ஆகும். அதற்காக தயார் செய்த கைப்பற்றுகை மகஜர் இதுதான். அது **அ,.சா.ஆ.8** ஆகும்.

8) பிறகு எதிரி மற்றும் கைப்பற்றிய தடய பொருளுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும் தடயத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும்.

9) பிறகு இவ்வழக்கில் காயமுற்ற விக்டர் பெர்னாண்டஸ் என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்ட காயம் மற்றும் சம்பவம் பற்றியும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.அதனை தொடர்ந்து மேற்படி நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் செந்தில்குமார் அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றேன். அந்த விபத்து பதிவேடு இதுதான். அது **அ.சா.ஆ.10** ஆகும்.

10) பின்பு மேல்சிகிச்சை செய்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் மோகன்ராஜ் அவர்களை

விசாரித்து அவரிடம் இருந்து காயம் சான்று பெற்றேன். அந்த காயச்சான்று இதுதான். அது **அ.சா.ஆ.11** ஆகும். காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினார்.

11) பின்பு அந்த காயசான்றின் அடிப்படையில் எதிரி மீது சட்டப்பிரிவு 294(பி) 324 307 இ.த.ச லிருந்து 294(பி) 326 307 இ.த.ச ன்படி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை இதுதான். அது **அ.சா.ஆ.12** ஆகும்.

12) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் வினோத்சரவணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

13) எனது விசாரணை முடித்து வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீது பிரிவு 294(பி) 326 307 இ.த.ச ன்படி இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

அரசு தரப்பு சாட்சிகள் 1,2,3 ஆகியோர்கள் கு.வி.மு.ச. 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடியே என் விசாரணையிலும் சொல்லி உள்ளார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சாட்சி வள்ளுவன் சேவியர் முன்னிலையில் எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அது அவர் முன்னிலையில் எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

2) அ.சா.2 ஐ விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம், தேதி சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன்படி எந்த தடய பொருளும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றால்சரியல்ல.

4) காயச்சான்று எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பதை காட்ட தேதி எதுவும் காயச்சான்றில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5) வழக்கிற்காக பொய்யான காயச்சான்று பெற்று எதிரி மீது பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

6) எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒரு பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.04 17:43:36 +0530